பக்கங்கள் 15+ 03

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | சித்திரை 27 சனிக்கிழமை 10.05.2025 | அதிர்வு 280

## வாக்கு வேட்டைக்காக வடக்கை நாங்கள் அரவணைக்கவில்லை

**இப்படி அநுர அரசு கூறுகின்றது**



“தேசிய மக்கள் சக்தி உண்மையாகவே வடக்குக்குச் சேவையாற்றுகின்றது. மாறாக வாக்குகளை இலக்கு வைத்து எமது கட்சி செயற்பட 02▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



**வடக்கு, கிழக்கு உள்ளூராட்சி சபைகளில் தமிழ்த் தரப்பு ஆட்சி அமைக்க**

# தமிழரசுக் கட்சிக்கும் ஆதரவு வழங்கத் தயார்

**கஜேந்திரகுமார் பகிரங்க அறிவிப்பு**

(எஸ்.நிதர்ஷன்)

“தமிழ் மக்கள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்துவது காலச் சூழலுக்குத் தேவையான ஒன்றாகும். இதனால் வடக்கு, கிழக்கு உள்ளூராட்சி சபைகளில் தமிழ்த் தரப்பு ஆட்சி அமைக்க நாம் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் கொள்கை நிலைப்பாட்டுடன் நின்று ஆதரவைக் கொடுக்கப் பின்னிற்க மாட்டோம்.”

- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

# குருந்தூர்மலையில் பௌத்த பிக்கு அடாவடி! விவசாயிகள் மூவர் பொலிஸாரால் கைது!!

(பா.சதீசன்)

முல்லைத்தீவு, குருந்தூர்மலை அடிவாரத்தில் உள்ள தமது சொந்த வயல் நிலங்களில் விவசாயம் செய்யும் பொருட்டு அதனை உழவு இயந்திரம் மூலம் தயார் செய்த காணி உரிமையாளர் குருந்தூர்மலையில் சட்டவிரோதமாக விகாரை அமைத்துள்ள விகாராதிபதியால் தடுக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

குருந்தூர்மலையில் கீழாக தமிழ் மக்களுக்குச் சொந்தமான பல நூற்றுக்கணக்கான நிலங்களைப் பௌத்த பிக்கு தொல்லியல் திணைக்களத்தின் துணையோடு ஆக்கிரமித்து



# அச்சுவேலியில் அதிகாலை கடை உரிமையாளர் மீது இனந்தெரியாத கும்பல் கொலைவெறித் தாக்குதல்!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். அச்சுவேலியில் இனந்தெரி யாத கும்பலொன்று நடத்திய தாக்குத லில் கடை உரிமையாளர் ஒருவர் பலத்த காயங்களுக்குள்ளாகியுள்ளார்.

கடை உரிமையாளர் இன்று அதி காலை அச்சுவேலி பிரதேச வைத்திய சாலை வீதியூடாக தனது கடையைத் திறப்பதற்கு மோட்டார் சைக்கிளில் சென்ற வேளை இடைவழியில் மறித்த இனந்தெரியாத கும்பல், அவர் மீது கடுமையாகத் தாக்குதல் நடத்தியது.





அந்த வீதியில் கார் ஒன்றில் காத்திருந்த இனந்தெரியாதோர் கடைக்குச் சென்றவரை இடையில் வழிமறித்துப் பொல்லுகளால் தலை, கை என்பவற்றில் கடுமையாகத் தாக்குதல் நடத்தினர்.

தாக்குதல் நடத்திய இருவர் தம்மை அடையாளம் காணாதவாறு முகத்தைத் துணியால் கட்டி மறைத்திருந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அச்சுவேலி பிரதேச வைத்தியசாலைக்கு முன்பாக உணவகமொன்றை நடத்தி வரும் சின்னையா ஆலாலசுந் தரம் (வயது 54) என்பவரே தாக்குதலில் பலத்த காயங்களுக்குள்ளாகியுள்ளார். மேற்படி நபர் அச்சுவேலி பிரதேச வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். தாக்குதல் சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## தமிழரசுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் இன்று நடத்திய ஊடக சந்திப்பில் மேற்கண்டவாறு குறிப்பிட்ட அவர், மேலும் தெரிவிக்கையில்,

“நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் தமிழ்த் தேசியப் பாதையிலிருந்து தமிழ் மக்கள் படிப்படியாக விலகி வருகின்றார்கள் என்று ஒரு செய்தி பரப்பப்பட்டு வந்தது.

இவ்வாறான ஒரு காலச் சூழலில் பிரதேசத்தின் அபிவிருத்தியை முன்னிறுத்திய ஒரு தேர்தலில் மக்கள் தமிழ்த் தேசியத்தை முன்னிறுத்தி வாக்களித்து வெற்றி பெறச் செய்துள்ளனர்.

இதனூடாக வடக்கு, கிழக்கில் தென்னிலங்கை இனவாதிகளுக்கு இடம் கொடுக்கப்படாது என்பதை ஆட்சியாளர்களுக்குத் தமிழ் மக்களால் உணர்த்தப்பட்டுள்ளது.

இதேவேளை, தமிழ்த் தேசியபப் பரப்பில் பெரும்பாலான பிரதேசங்களில் தமிழ்த் தேசியம் வெற்றி பெற்றுள்ள போதும் ஆட்சி அமைப்பதற்கான பெரும்பான்மையில் பின்தங்கிய போக்கே இருக்கின்றது.

அதேபோன்று தமிழ்த் தேசியப் பேரவைக்கும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸுக்கும் மக்கள் கொடுத்துள்ள அல்லது கிடைத்த வெற்றியாகவும் இதை நாம் பார்க்கின்றோம்.

தமிழ் மக்கள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்துவது காலச் சூழலுக்குத் தேவையான ஒன்றாகும்.

இதனால் வடக்கு, கிழக்கு உள்ளூராட்சி சபைகளில் தமிழ்த் தரப்பு ஆட்சி அமைக்க நாம் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் கொள்கை நிலைப்பாட்டுடன் நின்று ஆதரவைக் கொடுக்கப் பின்னிற்கமாட்டோம்.

குறிப்பாக ஆட்சி அதிகாரக் கதிரைக்கான தேசியமாக - ஒற்றுமையாக இல்லாது தூய்மையான ஆதரவுக்கான அழைப்பாக இருந்தால் அந்த அழைப்புக்குத் தமிழ்த் தேசிய பேரவை ஆதரவு கொடுக்கும்.

மேலும் ஒற்றுமையை வலுப்படுத்தத் தமிழ் அரசியல் பரப்பில் உள்ள பல தரப்பட்டவர்களுடனும் பேசியிருந்தேன். அதற்கான சாதக பெறுபேறும் கிடைத்தது.

அதேநேரம் தமிழரசுக் கட்சியை ஓரங்கட்டும் நிலையும் எம்மிடம் இல்லை. அவர்களுடனும் பேசியே பயணிக்க வேண்டும்.

தவறான பாதையில் மக்கள் வழி நடத்தப்படுவதை உணர்ந்து அதை வெளிப்படுத்தி தேசியத்தின் பாதையில் மக்களைக் கொண்டு செல்ல நாம் வழிவகுத்தோம்.

அதன் ஒரு பகுதியாகவே இம்முறை தமிழ்த் தேசியப் பேரவை என்ற கூட்டின் கீழ் உள்ளூர் அதிகார சபைத் தேர்தலில் மக்களிடம் சென்றிருந்தோம். அதற்கான அங்கீகாரதை மக்கள் தந்துள்ளனர்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்க் கட்சிகளின் போக்குக்கு மக்கள் ஒரு பாடத்தைக் கொடுத்தார்கள். அந்தப் பாடத்தின் ஊடான கிடைத்த படிப்பினைகள் தற்போது தமிழ்த் தேசியப் பாதையை மீளவும் உறுதிப்படுத்திக் கொடுத்துள்ளது.” - என்றார்.

## குருந்தூர்மலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்துள்ளார். இந்தக் காணிகளுக்கு அண்மையாக இன்று காலை குமுழமுனை தண்ணிமுறிப்பு குளத்தின் கீழான நீர்ப்பாசனத்தின் ஊடாக விவசாயம் செய்யும் நோக்கில் குறித்த காணியின் உரிமையாளர் சசிகுமார் என்பவர் தனது பணியாட்கள் மூலம் உழவு செய்துள்ளார்.

இதன்போது அவ்விடத்துக்கு வருகை தந்த குருந்தூர்மலை பௌத்த பிக்கு கல்கமுவ சாந்த போதி மற்றும் தொல்லியல் திணைக்களத்தினர், பொலிஸார் இணைந்து விவசாய நடவடிக்கைகளைத் தடுத்ததோடு விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மூன்று விவசாயிகளை உழவு இயந்திரத்துடன் கைது செய்து முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர்.

குறித்த காணியின் உரிமையாளர் சசிகுமார் இருதய நோய்க்குச் சிகிச்சை பெறுவதற்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் நிலையில் அவரின் பணியாளர்கள் மூலமாக விவசாய நடவடிக்கைக்கு ஆயத்தங்களை மேற்கொண்டபோதே இவ்வாறு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு பணியாளர்களான விவசாயிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## வாக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை.”- இவ்வாறு அமைச்சர் பிமல் ரத்நா யக்க தெரிவித்தார்.

தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“காணாமல்போயிருந்த நிலையில் மீண்டும் கிடைப்பவருக்கே வீடுகளில் கூடுதலாக கவனிப்பு இருக்கும். ஏனெனில் அவர்கள் பட்ட கஷ்டம், வலி பெரும் வேதனைமிக்கதாக இருந்திருக்கும்.

வடக்கு என்பதும் இலங்கைக்குக் கிடைக்காமல் இருந்த பிள்ளைதான். தற்போது அந்தப் பிள்ளை நாட்டுக்குக் கிடைத்துள்ளது. போரால் வடக்கு மக்களே பெரிதும் பாதிக்கப்பட்டார்கள்.

எனவே, தேசிய நல்லிணக்கத்துக்காக மட்டும் அல்ல அபிவிருத்திக்காகவும் எம்மால் செய்யக்கூடிய அனைத்தையும் செய்வோம்.

இதனை நாம் வாக்குகளுக்காக செய்யவில்லை. நாம் சேவை செய்தால் வாக்கு என்பது தாமாகவே கிடைக்கும். எனவே, உண்மையாகவே சேவையாற்றுகின்றோம்.

வடக்கு மாகாணத்தில் மன்னாரில் எமக்குப் பெரும்பான்மை பலம் கிடைத்துள்ளது. வவுனியாவிலும் வெற்றி கிடைத்துள்ளது. வடக்கில் 150 உள்ளூராட்சி உறுப்பினர்கள் கிடைக்கப்பெற்றுள்ளனர். இதற்கு முன்னர் அவ்வாறு இருக்க வில்லை. கிழக்கிலும் 216 உறுப்பினர்கள் கிடைக்கப்பெற்றுள்ளனர்.” - என்றார்.



# மண்டைதீவில் 'நெய்தல் சூழல்நேய பூங்கா' ஆளுநரால் திறப்பு

மண்டைதீவில் அமைக்கப்பட்டுள்ள 'நெய்தல் சூழல்நேய பூங்கா' நேற்று வெள்ளிக்கிழமை வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனால் திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் உரையாற்றிய ஆளுநர், "யாழ். மாவட்ட செயலராக நான் பணியாற்றிய காலத்தில் இந்தப் பகுதியில் சுற்றுலாத்துறைக்கான அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. துரதிஷ்டவசமாக அப்போதிருந்த பிரதேச சபை நிர்வாகம் எமக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கவில்லை.

பல முதலீட்டாளர்கள் முதலிடுவதற்காக வருகின்றபோதும் எமது திணைக்களங்களால் அவர்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு கிடைக்கப்பெறவில்லை. தமது சபைகளுக்கு வருமானத்தை ஈட்டித் தரக் கூடிய முத



லீட்டாளர்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதற்கு தயக்கம் காண்பிக்கின்றனர். இழுத்தடிப்புச் செய்கின்றனர். ஏற்கனவே இங்கு முதலீடுகளைச் செய்த பலரும், எமது நிர்வாகங்களின் அசமந்தமான செயற்பாடு காரணமாக கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். இந்த நிலைமை தொடருமானால் இங்கு முதலீட்டாளர்கள் வருவதற்கு தயக்கமான நிலைமையே ஏற்படும். அது எமது மாகாணத்தை பல வகையிலும் பாதிக்கும். இளையோருக்கு வேலை வாய்ப்பு தேவை என்று நாம் கோரும் அதேவேளை அதற்கு முதலீடுதான் வழியாக இருக்கும் நிலையில் அதனையும் இழப்பது பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

இங்கு அமைக்கப்பட்டுள்ள பூங்கா போன்று பல வேலைத் திட்டங்கள் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் என நம்புகின்றேன். அத்துடன் இந்தப் பிரதேசத்தில் இவ்வாறான முயற்சியை மேற்கொண்டுள்ள நெய்தல் சூழல் நேயப் பூங்காவின் நிறுவுநர் சி.அனுராஜ்க்கும் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்." – என்றார் ஆளுநர்.

இந்தப் பூங்கா 2 ஆண்டுகளில் 7 கட்டங்களாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.










# வவுனியாவில் ரெலோவின் உயர்மட்டக் கலந்துரையாடல்


(கி.வசந்தன்)


தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைமைக் குழுக் கூட்டம் வவுனியாவில் இன்று இடம்பெற்றது.

ரெலோவின் தலைவரும் நாடாளு மன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் வவு னியா வைரவபுளியங்குளத்தில் அமைந் துள்ள கட்சியின் அலுவலகத்தில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

ரெலோவின் சமகால அரசியல் நிலைவரங்கள், உள்ளூராட்சி சபைத் தேர்தலில் முடிவடைந்துள்ள நிலையில் சபைகளில் ஆட்சியமைப்பது உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து இந்தக் கலந்துரையாடலில் பேசப்பட்டன என்று அறியமுடிகின்றது. கலந்துரையாடலில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்க ளான எஸ்.வினோநோகராதலிங்கம், கோவிந்தன் கருணாகரம், கட்சியின் முக்கியஸ்தர்களான ஹென்றி மகேந் திரன், பிரசன்னா இந்திரகுமார், சுரேன் குருசாமி உள்ளிட்ட உயர்மட்ட உறுப் பினர்கள் கலந்து கொண்டனர்.





# ஆலய திருவிழாவில் நடந்த வானவேடிக்கையால் பண்பாட்டு மலர்ச்சிக் கூடம் எரிந்து நாசமாகியது!

யாழ்ப்பாணம் – கந்தர்மடம் பழம் வீதியில் அமைந்துள்ள சமூக செயற் பாட்டு மையமாக விளங்கி வந்த பண்பாட்டு மலர்ச்சிக் கூட அரங்கால யத்தின் மேற்கூரை தீ விபத்தில் எரிந்து நாசமாகியது.

இந்தச் சம்பவம் கடந்த வியாழக் கிழமை இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

பழம் வீதியில் உள்ள வைரவர் ஆல யத்தின் அலங்காரத் திருவிழா இடம் பெற்று வருகிறது. அன்றிரவு சுவாமி வெளிவீதியுலாவின் போது வானவேடிக் கைகள் இடம்பெற்றன. இந்த வேளையில் அதிலிருந்து பறந்த தீப்பொறி அரங்காலய மேற்கூரையில் பட்டு எரிந்துள்ளது.

இதனைப் பார்த்த அயலவர்கள் உடனடியாக தீயணைப்பு பிரிவின ருக்கும், பொலிஸாருக்கும், அரங்காலய நிர்வாகத்தினருக்கும் அறிவித்துள் ளனர்.

அவர்கள் உடனடியாக சம்பவ இடத்துக்கு வந்த போதும், கிடுகு ஓலை கள் முழுவதும் எரிந்திருந்தன. மேற் கூரை மரங்கள், இலத்திரனியல் பொருள்கள், கதிரைகள் உள்ளிட்ட தளபாடங்களும் பகுதியளவில் தீயால் சேதமடைந்தன.

இதனையடுத்து பொலிஸார் விசார ணைகளை மேற்கொண்டு மேலதிக நடவடிக்கைக்காக பண்பாட்டு மலர்ச்சிக் கூடத்தினரிடம் இருந்து வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்.

ஆலயங்கள் மற்றும் பொது நிகழ் வுகளில் வான வேடிக்கைகள் நிகழ்த்து பவர்கள் சமூகப் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்று சமூக ஆர்வ லர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

பண்பாட்டு மலச்சிக் கூடத்தில் பல் வேறு சமூக செயற்பாட்டு நிகழ்வுகளும், அரங்க செயற்பாடுகளும் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

## நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


# ஜனநாயகத் திருவிழா

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடந்து முடிந்து விட்டன. இனி சபைகளை நிர்வாகிக்கும் தரப்புகளை முடிவு செய்ய வேண்டிய கட்டம். உண்மையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை ஒட்டிய 'ஜனநாயகத் திருவிழா' இப்போதுதான் தொடங்குகின்றது.

தற்போதைய தேர்தல் முறைமையின் கீழ் எந்தக் கட்சியும் அறுதிப் பெரும்பான்மையைப் பெறுவதற்கான வாய்ப்புகள் பெருமளவு குறைவு. தேர்தல்கள் நடந்த 339 உள்ளூராட்சி சபைகளில் ஒரு சில டசின் சபைகளுக்கே அறுதிப் பெரும்பான்மையோடு தெரிவுகள் கிட்டி இருக்கின்றன. மற்றைய அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் தொங்கு சபைகளே வந்துள்ளன.

அடுத்து வரும் வாரங்களில் பிரதேச சபைத் தலைவர்கள், நகர பிதாக்கள், மாநகர மேயர்கள் எப்படியேனும் தேர்வு செய்யப்பட்டு விடுவார்கள். ஆனால் இந்தத் தொங்கு சபைகளில் நிர்வாகத்தைக் கொண்டு நடத்துவது பெரும் களேபரமாக நீடிக்கும். புதிதாக தெரிவாகும் சபையின் தலைவர் நம்பிக்கை வாக்கெடுப்பை பொறாமலேயே தமது வரவு - செலவுத் திட்டத்தை இரண்டு ஆண்டுகள் கொண்டிழுக்கலாம் என்பதால் பெரும்பாலும் சபைகள்அல்லோலகல்லோலங்களுடன் - முன்ன நகரும். 'நித்திய கண்டம், பூரண ஆயுசு' என்பது போல. ஆனால் இந்த முறைமை - நிலைமை - உள்ளூராட்சி மன்ற நிர்வாக மேன்மைக்குப் பொருத்தமானது அல்ல.

இந்தத் தேர்தல் முறைமை விகிதாசாரப் பிரதிநிதித்துவ அடிப்படையில் உச்ச ஜனநாயகமாக - உண்மையான பிரதிநிதித்துவத் தெரிவு முறையாக - இருக்கலாம். ஆனால் இது ஜனநாயக ரீதியில் ஒரு உள்ளூராட்சி மன்றத்தைக் கொண்டு நடத்துவதற்கு பொருத்தமான முறைமை அல்ல என்பது அனுபவரீதியாக உணரப்பட்டுள்ளது.

இத்தகைய தேர்தல் முறைமையைக் கொண்டு வந்தமை நல்லாட்சி அரசு செய்த பெரும் குளறுபடி என முன்னாள் வெளியுறவு மற்றும் நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்திருக்கிறார்.

பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதான நோக்கம் கொண்ட - மூன்று பிரிவுகளை மட்டும் உள்ளடக்கிய - சட்டப் பிரேரணையை சமர்ப்பித்து விட்டு, பின்னர் நீதிமன்ற ஆய்வு இல்லாமலேயே குழுநிலை விவாதத்தில் 132 புதிய உட்பிரிவுகளை அந்தச் சட்டத்தில் சேர்த்து, இந்தக் குழப்பத்தைச் செய்திருக்கிறார்கள் நல்லாட்சி அரசாங்கத்தினர் என அவர் குற்றம் சுமத்துகிறார்.

'சட்டமன்றத்துக்குள் பதுங்கி இருந்து ஜனநாயகத்தின் மீது நடத்திய தாக்குதல்' என்று அந்தத் தேர்தல் சட்டத் திருத்தம் கொண்டு வந்த முறைமையை விமர்சித்துள்ள அலி சப்ரி, இது ஜனநாயக விதிமுறைகள் மற்றும் நடைமுறை ஒழுங்கு விதிகளை மீறிய செயற்பாடு என்றும் கண்டிக்கிறார்.

உயர் நீதிமன்றத்தின் பரிசீலனைக்குப் போகாமலேயே குழுநிலை விவாதத்தில் இத்துணை விடயங்களை சேர்த்து சட்டத்தை மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றலாம் என்ற அனுமதியை அப்போதைய சட்டமா அதிபர் வழங்கியமை பெரும் தவறு என்றும் அலி சப்ரி குறிப்பிடுகிறார்.

அந்த சட்டம் ஆக்கிய முறைமை அவர் குறிப்பிடுகின்ற மாதிரி பிழையாகவும் இருக்கலாம், அல்லது சரியாகவும் இருக்கலாம். ஆனால் இந்த முறைமை ஜனநாயக விழுமியங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தோதானது அல்ல என்பது அனுபவபாடமாக வெளிப்பட்டிருக்கின்றது என்பது மட்டும் உண்மை.

# உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் ஒதுக்கீடு; கட்சிகள் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்!

## மாதர் ஒன்றிய இணைப்பாளர் மகாலெட்சுமி

(வாஸ் கூஞ்ஞ)

உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களின் பங்கீட்டில் பெண்களுக்கு என் று ஒதுக்கப்பட்ட விகிதாசாரத்தை ஒவ்வொரு கட்சியும் கவனத்தில் எடுத்து அவற்றை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று வடக்கு, கிழக்கு மற்றும் மலையக மாதர் ஒன்றிய அமைப்பினர் ஒன்றித்து வலியுறுத்துகின்றோம் என்று மன்னார் மாவட்ட மாதர் ஒன்றிய இணைப்பாளர் திருமதி மகாலெட்சுமி குருசாந்தன் தெரிவித்தார்.



மன்னார் மாவட்ட மாதர் ஒன்றிய இணைப்பாளர் திருமதி மகாலெட்சுமி குருசாந்தன் மேலும் தெரிவிக்கையில்,

தற்பொழுது நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் 25 வீதமான பெண்கள் உள்வாங்கப்பட வேண்டும் என்பது கட்டாய விதியாகும்.

இது நடைமுறையில் இருப்பதை நாங்கள் தக்கவைக்க வேண்டும் என்பதற்காக வடக்கு, கிழக்கு பகுதி மற்றும் மலையக பெண்கள் அமைப்புக்கள் ஒன்றிணைந்து பெண்களுடைய இந்த விகிதாசார ஒதுக்கீட்டை கவனத்தில் கொண்டு இவற்றை நடைமுறைப் படுத்தப்பட வேண்டும்.

பெண்கள் அமைப்புகளாகிய நாங்கள் தேர்தல் ஆணையாளருக்கு இது தொடர்பில் தெரியப்படுத்தியுள்ளோம்.

இது தொடர்பாக நாங்கள் 34 அமைப்புக்கள் கையொப்பம் இட்டு தேர்தல் ஆணையத்துக்கு மகஜரும் அனுப்பி வைத்துள்ளோம்.

இந்த மகஜரில் நாங்கள் வேண்டி நிற்பது, ஒவ்வொரு கட்சியும் வழங்கப்பட்டுள்ள வாக்குகளின் பிரகாரம் பெற்றிருக்கும் ஆசனங்களில் பெண்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட விகிதாசாரத்தை கட்டாயம் வழங்கப்பட வேண்டும் என்பதுதான்.

அடுத்து ஒருசில கட்சிகள் ஆசனங்களைக் குறைவாக பெற்றிருந்தாலும் அவர்களும் பால்நிலை சமத்துவத்தை மேம்படுத்த வேண்டும் என்றும் இதற்கு தேர்தல் ஆணையகம் அவர்களை வலியுறுத்த வேண்டும் என்றும் நாங்கள் தேர்தல் ஆணையாளரை வலியுறுத்தியுள்ளோம்.

இதை சட்டரீதியாக நடைமுறைப் படுத்த தேர்தல் திணைக்களத்துக்கே கூடுதலான அதிகாரம் இருக்கின்றது. இதன் காரணமாகவே நாங்கள் இந்த அறிக்கையை அவர்களுக்கு கையளித்துள்ளோம்.

அத்துடன் 2017 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றங்களில் பெண்கள் உறுப்பினர்களின் விகிதாசாரம் தொடர்பான சட்டத்திட்டங்கள் உருவாக்கப்பட்டபோதும் அது இன்றுவரை சரியான முறையில் அமுல்படுத்தப்படாத நிலையே காணப்படுகின்றது.

உண்மையில் தேர்தல் திணைக்களம் பெண்கள் மற்றும் இளைஞர்கள் தொடர்பாக கட்சிகளில் தேர்தலில் போட்டியிடுவதற்கு எடுத்திருக்கும் நடவடிக்கையை நாங்கள் வரவேற்கின்றோம்.

ஆனால் தேர்தல் முடிவில் கட்சிகள் பெண்களை ஒதுக்கும் செயற்பாட்டில் ஈடுபடுவதைக் கண்டித்தே நாங்கள் இதை வலியுறுத்துகின்றோம்.- என்றார்.



# சாரணர்களுக்குத் தங்கத் தாரகை பதக்கம் வழங்கும் விழா கொழும்பில்

(றிபாஸ்)

குருளைச் சாரணர்ளுக்கான உயர் பதக்கமான தங்கத் தாரகை பதக்கம் வழங்கும் விழா அண்மையில் கொழும்பில் நடைபெற்றது.



கொழும்பு சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் குருளைச் சாரணத் தலைவர்களான துவான் பஸீல், அஸ்மியா ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கொழும்பு மாவட்ட சாரண ஆணையாளர் சம்பத் விஜேசிங்க, பாடசாலையின் அதிபர் திருமதி மர்சூக் பிரதம அதிதிகளாகவும், உதவி மாவட்ட சாரண ஆணையாளர்களான றிஸ்வி, இர்ஸாத், பிர்தௌஸ், தாஹா, ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

சிரேஷ்ட சாரணத் தலைவர்கள், சாரணத் தலைவர்கள், கனிஷ்ட, குருளைச் சாரணர்களின் பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.

# மாதுறு ஓயா விபத்தில் காயமடைந்தோரை நேரில் பார்வையிட்டார் இராணுவத் தளபதி

இலங்கை இராணுவ சிறப்புப் படையின் மாதுறு ஓயா பயிற்சிப் பாடசாலையில் நடைபெறவிருந்த பட்டமளிப்பு அணிவகுப்பின் போது ஏற்பட்ட விமான விபத்தில் காயமடைந்த இராணுவத்தினரை, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லசந்த ரொட்ரிகோ, பொலன்னறுவை பொது மருத்துவமனைக்கு நேரில் சென்று பார்வையிட்டார்.

அந்த இராணுவ வீரர்களுக்கு எதிர்காலத்தில் தேவைப்படும் சிகிச்சை தொடர்பில் மருத்துவமனை அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களும் நடத்தப்பட்டன.





### கடவத்தையில் பாடசாலைச் சிறுவன் ஒருவன்

# காலை உணவுக்காக எடுத்து வந்த மீன் பணிஸில் கஞ்சா பொதிகள்!

கம்பஹா – கடவத்தை பகுதியில் உள்ள ஆரம்ப பாடசாலைக்குச் சென்ற சிறுவன் ஒருவன் காலை உணவுக்காக எடுத்து வந்த மீன் பணிஸில் இருந்து இரண்டு சிறிய கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

சிறுவன் பணிஸைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது இரண்டு சிறிய பைக்கற்றுகள் காணப்பட்டுள்ளன. இது குறித்து வகுப்பு ஆசிரியருக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து, ஆசிரியர் பிள்ளையின் தாயாரைத் தொலைபேசியில் அழைத்த நிலையில், தாய் பிள்ளைக்கு பணிஸைக் கொடுக்க வேண்டாம் என்றும் அது பழுதடைந்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

வெதுப்பக உணவுகள் விற்கும் ஓட்டோவில் இருந்து அது வாங்கப்பட்டதாகவும் ஓட்டுநர் திரும்பி வந்து பிள்ளைக்கு பணிஸைக் கொடுக்க வேண்டாம் என்று தெரிவித்தார் என்றும் தாயார் கூறியுள்ளார்.

பின்னர், இந்த விடயம் பாடசாலையின் அதிபருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. வெதுப்பக உணவுகள் விற்கும் ஓட்டோ சாரதி சூட்சுமமாக கஞ்சா கடத்தலில் ஈடுபட்டதும் தெரிய வந்துள்ளது.

வேறு ஒருவருக்கு கொடுக்கக் கொண்டு வந்த கஞ்சா அடங்கிய பணிஸ் தவறுதலாக இந்த தாய்க்கு விற்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பாக அதிபர் கடவத்தை பொலிஸில் முறைப்பாடு அளித்துள்ளார்.





# தென்கிழக்கு பல்கலையில் அசையும் மாதம்

(நூருல் ஹுதா உமர்)

உலக சுகாதார ஸ்தாபனம், ஏப்ரல் மாதத்தை நகர்வு மாதமாகப் பிரகடனப் படுத்தியுள்ளது. இதனை முன்னிட்டுச் சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைவாக, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய தொற்றா நோய் தடுப்பு பிரிவு உடல், உள ஆரோக்கியத்துக்கு உடற்பயிற்சியின் அவசியம் குறித்து பல்வேறு விழிப்புணர்வு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகிறது.

இதனையடுத்து உடற்பயிற்சியை ஊக்குவிக்கும் பொருட்டு இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் மாணவர்களுக்கென ஏற்பாடு செய்யப்பட்ட விழிப்புணர்வு செயலமர்வு ஒன்று பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது.

பல்கலைக்கழகத்தின் பணியாளர் மேம்பாட்டு நிலையத்துடன் இணைந்து கல்முனை பிராந்திய தொற்றா நோய் தடுப்புப் பிரிவு குறித்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

இந்த நிகழ்வில் இலங்கை தென்கிழக்கு பல்கலைக் கழகத்தின் பதில் உபவேந்தர் கலாநிதி யூ.எல்.ஏ.மஜீட், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன், தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பணியாளர் மேம்பாட்டு நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி எச்.எம்.நிஜாம், பிராந்திய தொற்றா நோய் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஐ.எம்.எஸ்.இர்ஷாத் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி விசேட வைத்திய நிபுணர் டாக்டர் ஏ.ஏ.எம்.புஹைம் வளவாளராகக் கலந்துகொண்டு உடற்பயிற்சியின் முக்கியத்துவம் தொடர்பாக விரிவுரையாற்றினார்.

# கொட்டாஞ்சேனையில் மாணவி விடயத்தில் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன!

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அறிக்கை

கொழும்பு, கொட்டாஞ்சேனையில் மாணவி ஒருவர் தமது உயிரை மாய்த்துக் கொண்ட சம்பவம் தொடர்பில் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை அறிக்கை ஒன்றை வெளியிட்டு இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளது.

அத்துடன் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் சட்டத்துக்கு அமைய, கொட்டாஞ்சேனை மற்றும் பம்பலப்பிட்டி பொலிஸாரிடம் இருந்து இந்த விடயம் தொடர்பில் அறிக்கை கோரப்பட்டுள்ளது.

பாடசாலைக்குள் இடம்பெறும் உடல், உள மற்றும் பாலியல் துன்புறுத்தல் தொடர்பில் அறியப்படுத்தாமை, பாடசாலையின் நற்பெயரை பாதுகாக்கும் நோக்கில் செயற்படுதல் போன்றவற்றால் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது என்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறும்போது உடனடியாகப் பாடசாலையின் அதிபர் அல்லது பொறுப்பு வாய்ந்த தரப்பினர் அது தொடர்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு அறியப்படுத்த வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



### சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கி வந்த

# வெதுப்பகம் மற்றும் உணவகம்; 70 ஆயிரம் ரூபா தண்டம் விதிப்பு!

(வடமராட்சி நிருபர்)

பருத்தித்துறை நகர சபைக்கு உட்பட்ட பகுதியில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வந்த வெதுப்பகம் மற்றும் உணவகம் என்பவற்றுக்கு 70 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகரசபையின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதியில் மருத்துவ சான்றிதழ் இல்லாமல் வெதுப்பகப் பொருள்களைக் கையாண்டமை, தனிநபர் சுகாதாரம் பேணாமை, வெதுப்பகச் சுற்றாடலில் இலையான்கள் பெருக இடமளித்தமை, அழுகிய உருளைக் கிழங்குகளை உணவு தயாரிப்புக்குக் களஞ்சியப்படுத்தியமை, வெதுப்பகப் பொருள்களுடன் தொற்று ஏற்படும் வண்ணம் இரசாயன பொருள்களைக் களஞ்சியப்படுத்தி வைத்திருந்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் கீழ் நகர சபையின் பொது சுகாதார பரிசோதகர் ப.தினேஷ் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, தன் மீதான குற்றச்சாட்டை உரிமையாளர் ஏற்றுக்கொண்டதை அடுத்து, உரிமையாளரை கடுமையாக எச்சரித்த மன்று, 50 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது.

அதேவேளை மருத்துவ சான்றிதழ் இல்லாமல் உணவவைக் கையாண்டமை, தனிநபர் சுகாதாரம் பேணாமை, குடிப்பதற்கும் சுத்திகரிப்புக்கும் பயன்படும் நீரானது குடிக்கத்தக்கது என உறுதி செய்ய தவறியமை, சமைத்த மற்றும் சமைக்காத உணவுப் பொருள்களைத் தொற்று ஏற்படும் வண்ணம் களஞ்சியப்படுத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டின் கீழ் மற்றைய உணவக உரிமையாளருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

உரிமையாளர் தன் மீதான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டதை அடுத்து, உரிமையாளரை கடுமையாக எச்சரித்த மன்று, 20 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது.



# சித்திரைச் செவ்வாய் முளைக்கொட்டு!

(உடப்பு க.மகாதேவன்)

உடப்பை அண்மித்த வட்டவான் கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ வடபத்திர காளியம்மன் ஆலயத்தின் வருடாந்த சித்திரைச் செவ்வாய் முளைக்கொட்டு கடந்த புதன்கிழமை மிகவும் பக்தி பூர்வமாக இடம்பெற்றது. இறுதியில் கடற்கரையில் சென்று கும்பம் சொரிதல் நிகழ்வுடன் இனிதே நிறைவு பெற்றது.







# குளியாப்பிட்டிய - மாதம்பே வீதியில் கார் விபத்தில் ஒருவர் உயிரிழப்பு!

குளியாப்பிட்டிய – மாதம்பே வீதியில் பலுகமுவ பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று வெள்ளிக் கிழமை (09) நள்ளிரவு 12.15 மணியள வில் இடம்பெற்றுள்ளது.

வேகக் கட்டுப்பாட்டை இழந்த கார் ஒன்று வீதியை விட்டு விலகி சுமார் 25 மீற்றர் தூரத்துக்கு இழுத்துச் செல்லப் பட்டு அருகிலிருந்த வீடொன்றின் இரும்பு நுழைவாயில் மற்றும் மின் கம்பத்தின் மீது மோதி பின்னர் மற்று மொரு வீட்டின் கிணற்றின் மீது மோதி





யதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த காரின் சாரதி சிகிச்சைக்காக வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் என்ற பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின் போது உயிரிழந்த சாரதி மதுபோதையில் இருந்துள்ளார் என் றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசார ணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நாடளாவிய ரீதியில் விசேட சுற்றிவளைப்பு; போதைப் பொருள்களுடன் 359 பேர் கைது!

## பொலிஸ் ஊடகப் பிரிவு தகவல்

நாடளாவிய ரீதியில் நேற்று வெள்ளிக்கிழமை (09) பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவ ளைப்பு நடவடிக்கையின் போது போதைப் பொருள்களுடன் 359 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ்ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, ஹெரோயின் போதைப் பொருளுடன் 129 பேரும், ஐஸ் போதைப் பொருளுடன் 133 பேரும், கஞ்சா போதைப் பொருளுடன் 94 பேரும், கஞ்சா செடிகளுடன் 03 பேரும் பொலி ஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவ டிக்கையின் போது 166 கிராம் 220 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருளும், 176 கிராம் 446 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளும், 04 கிலோ 142 கிராம் 135 மில்லி கிராம் கஞ்சா போதைப் பொருளும், 12534 கஞ்சா செடிகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள் ளது.






# அன்னையர் தினம் ‘சென்ரி மென்ட்’ நாளாக இருக்க வேண்டும்...!

**(மே மாதம் இரண்டாம் ஞாயிற்றுக்கிழமை நாளை அன்னையர் தினமாகும். அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.)**

‘தாயிற்சிறந்த கோவிலுமில்லை.....” என்ற வரிகள் தாய்மையின் புனிதத்துவம், தாய்மையின் பெருமை, தாய்மையின் தியாகம் போன்றவற்றை எடுத்துக் கூறத் தக்க வரிகளாகும். இந்த உலகில் தாய்க்கு ஈடாக ஒப்பிட எதுவுமே இல்லை. ஒரு பெண்ணானவள் மகளாக, சகோதரியாக, தாயாக, தாரமாக, தோழியாக வீட்டிலுள் ளோரைப் பக்குவப்படுத்தும் பாட்டியாக, அனுபவங்களின் அரவணைப்பில் வழி நடத்திச் செல்லும் ஆசானாக இப்படி தன் வாழ்நாளில் எத்தனையோ பாத்திரங்களில் வலம் வந்தாலும் ‘அன்னை’ என்ற பாத்திரம்தான் மிக உன்னதமான இடத்தை வகிக்கிறது. தாய்மை என்பது ஓர் உன்னதமான உணர்வு.

அத்தகைய தாயைப் போற்றவே மே மாதத்தின் இரண்டாவது ஞாயிறு அன்னையர் தினமாகக் கொண்டாடப்படுகிறது. “அன்னையர் தினம” உல கெங்கும் கொண்டாடக் காரணமாக இருந்த பின்னணி பற்றி நாம் ஒரு சிறிய விளக்கத்தைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

அன்னையர்களுக்கு மரியாதை செலுத்தும் சம்பிரதாயம் புராதன காலத்திலேயே தொடங்கி விட்டதாக வரலாற்றுச் சான்றுகள் பகருகின்றன. பண்டைய கால மனிதர்களால் அன்னையர் புராணங்கள் கதையாக வழங்கப்பட்டு வந்தன. இதில் முக்கியமாக பெண் கடவுளான சைபீல் என்ற கடவுள் வணங்கப்பட்டாள்.

இந்தப் பெண் தெய்வமே எல்லாக் கடவுளுக்கும், முழு முதல் தாய்க் கடவுளாக அம்மக்களால் வணங் கப்பட்டுள்ளது. வருடததுக்கு ஒரு முறை இந்த முழுமுதல் தாய்க் கடவுளுக்கு பிரிஜியா மக்களால் விழா எடுக்கப்பட்டு வந்தது. இந்த விழாவே அன்னையர்களை மரியாதை செய்யும் முதல் விழா கொண்டாட்டமாகக் கருதப்படுகிறது.

அம்மா... இந்தச் சொல்லில் புதைந்துள்ள அர்த் தங்களும், தொனிகளும் ஆயிரமாயிரம். அம்மாக்களின் மேன்மையை எடுத்துரைக்காத எந்த மனிதருமே உலகத்தில் இருப்பாரென கூறமுடியாது. உலக அளவில் தாய்மையை போற்றும் வகையில் கொண்டாடப்படும் அன்னையர் தினம் ஏனைய சர்வதேச தினங்களைப் போல ஒரு குறித்த நாளில் கொண்டாடப்படுவதில்லை.

பொதுவாக மே மாதத்தின் இரண்டாவது ஞாயிறன்று உலகில் அநேக நாடுகள் கொண்டாடினாலும்கூட, வேறும் சில நாடுகள் அதற்கு முன்போ அல்லது பின்போ கொண்டாடுகின்றன.

இவ்வாறான நிலையில் 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் நவீன காலத்தில் உலகளாவிய ரீதியில் அன் னையர் தினம் கொண்டாடு வதற்கான சந்தர்ப்பம் உரு வான வரலாற்றின் பின்னணி பின்வருமாறு அமைந் திருந் தது.

“ஜார்விஸ்” என்ற பெண் சமூக சேவகி அமெரிக்காவின் மேற்கு வேர்ஜினியா மாநிலத்தில் கிராப்டன் என்ற கிராமத்தில் வாழ்ந்து வந்தார். அந்தக் காலத்தில் யுத்த களத்தில் அமெரிக்க வீரர்கள் பலியாயினர். அவர்களின் குடும்பங்களும் சிதைந்து சீரழிந்து நாலாபக்கமும் சிதறிப்போயினர். பிரிந்த குடும்பங்கள் ஒன்று சேரவும், அவர்களின் நல்வாழ்க்கைக்கும், சமாதானத்துக்கும் தன் இறுதி மூச்சுவரை அயராது பாடுபட்டு சமூக சேவகியாகவே வாழ்ந்து 1904 இல் ஜார்விஸ் மறைந்தார்.

இவரின் மகள் அனா ஜார்விஸ் முதன்முதலாக தனது அன்னையின் நினைவாக உள்ளூரில் உள்ள மெத்தடிஸ்ட் சர்ச்சில் 1908 ஆம் ஆண்டு மே மாதத்தில் ஒரு ஞாயிற்றுக்கிழமை சிறப்பு வழிபாடு ஒன்றை நடத்தினார். தனது அன்னையைப் பாராட்டி சீராட்டி அன்னையர் தினம் கொண்டாடிய முதல் பெண் என்ற பெருமையையும் இவர் பெறுகிறார்.

சமூக நலனில் அக்கறை கொண்ட ஜார்விஸ் ஏதாவது ஒரு நாளையாவது எல்லோரும் தங்களது தாயை அவர் உயிரோடு இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி அவளது தியாகத்தையும் தங்களுக்கு அவள் செய்த ஈடு இணையற்ற பணியையும் நினைத்து அவளை கௌரவிக்க வேண்டும் என்று விரும்பினார்.

இதைத் தொடர்ந்து அனா ஜார்விஸ் 1913 ஆம் ஆண்டில் தன் பணி நிமித்தம் பென்சில்வேனியா மாநிலத்தில் பிலடெல்பியாவில் குடியேறினார். தாயார் விட்டுச் சென்ற சமூக சேவையை மகள் ஜார்விஸ் தன் தனிப்பெரும் கடமையாகக் கருதித் தொடர்ந்தார். கஷ்டப்படும், வாழ்க்கையில் இன்னலும், சோதனைகளும் ஒருசேரத் தாக்கி மனம் வெந்து, நொந்து சமூகத்தில் ஓரங்கட்டப் பட்டவர்களுக்கான அமைப்பில் தன்னை இணைத்துக் கொண்டார். தன் தாயாரின் நினைவாகவும், தத்தம் வீடுகளில் அவரவர் அன்னையர்களும் கௌரவிக்கப்பட வேண்டும்.

எல்லோர் இல்லங்களிலும் அன்றைய தினம் மகிழ்ச்சி ததும்ப வேண்டும் என்று எண்ணினார். தம் எண்ணத்தை

தொடர்ச்சி▼




# அன்னையர் தினம் ‘சென்ரி மென்ட்’ நாளாக இருக்க வேண்டும்...!

**தொடர்ச்சி▲**

பென்சில்வேனியா மாநில அரசுக்குத் தெரிவித்தார். அரசும் அவர் கருத்தை ஏற்று 1913 ஆம் ஆண்டு முதல் அன்னையர் தினம் என அங்கீகரித்து அறிவித்தது.

மாநில அரசு அங்கீகரித்தாலும் அனா ஜார்விஸ் திருப்தி அடையவில்லை. ஆயிரக் கணக்கில் அரசியல் வாதிகளுக்கும், தன்னார்வ அமைப்புகளுக்கும், வர்த்தக அமைப்புகளுக்கும் கடிதங்கள் எழுதி அமெரிக்கா முழுவதும் “அன்னையர் தினம்” கொண்டாடவும் அந்த நாளை அரசின் விடுமுறை நாளாகவும் அங்கீகரித்து அறிவிக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

அமெரிக்க ஜனாதிபதிக்கும் இதேவேண்டுகோளை விடுத்தார். இவரின் வேண்டுகோளையும், நியாயத்தன்மையையும் ஏற்றுக்கொண்ட அமெரிக்கா ஜனாதிபதி வுட்ரோ வில்சன் 1914 ஆம் ஆண்டு வருடம் தோறும் மே மாதம் இரண்டாம் ஞாயிற்றுக்கிழமையை அதிகார பூர்வமாக அன்னையர் தினமாகவும், அன்று விடுமுறை தினமாகவும் இருக்கும் அறிவிப்பை வெளியிட்டார்.

இவ்வறிவிப்பை அமெரிக்க காங்கிரசும் ஏற்றுக் கொண்டது. பின்பு கனடா அரசாங்கமும் ஏற்று அங்கீகரித்து அறிவித்தது. அதுமட்டுமல்ல 46 நாடுகள் இதே நாளில் “அன்னையர் தினம்” என அறிவித்து நடைமுறைப்படுத்தியது. தனது வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப் பட்டதையிட்டு ஜார்விஸ் அளவற்ற மகிழ்ச்சியடைந்தாலும் முழு மனநிறைவடையவில்லை. 46 நாடுகளில் மட்டுமல்ல உலகமெங்கும் அன்னையர் தினம் கொண்டாடப்பட வேண்டும் என்ற எண்ணத்தில் அவர் தொடர்ந்தும் ஈடுபட்டார்.

உலகம் முழுக்க “அன்னையர் தினம்” அனுசரிக்கப்படவேண்டும். ஒவ்வொரு வீட்டிலும் அன்னையைப் போற்றுகிற, வாழ்த்துகிற, மகிழ்விக்கின்ற நாளாக அன்றைய தினம் மலர்ந்து மணம் பரப்ப வேண்டும் என்பதுதான் என் ஆசை என்று தனது 84 ஆவது வயதில் தனியார் மருத்துவமனையில் இறப்பதற்கு முன் தன்னைச் சந்தித்த நிருபர்களிடம் வெளிப்படுத்தினார். அவருடைய ஆசை இன்று அனேகமாக பூர்த்தியாகிவிட்டது என்றே சொல்லலாம்.

இன்று நாம் கொண்டாடும் அன்னையர் தினம் அன்னைகளுக்கு எல்லாம் அன்னையாகத் திகழ்ந்த அனா ஜார்விஸ் என்பவரின் முயற்சியாலேயே ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அதேநேரம், அனா ஜார்விஸ் திருமணமானவரோ பிள்ளைகளைப் பெற்றெடுத்தவரோ அல்ல. அன்னைகளுக்காக அரும்பாடுபட்டவர் என்பதே உண்மை. அன்னையர் தினத்தில் எமது அன்னையை மட்டுமல்ல அன்னையர்களின் நாம் மதித்து மகிழ்விக்க வேண்டும்.

அவர்களுக்காகப் பிரார்த்தனைகளைப் புரிய வேண்டும். மானசீகமான எமது அன்பை வழங்க வேண்டும். அன்னையை மதிப்பது ஒருநாளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதன்று. ஆனாலும், அன்னையர் தினம் என்று குறிக்கப்பட்ட தினத்தில் விசேட மதிப்பும், மகிழ்விப்பும் அன்னைக்கு வழங்கப்பட வேண்டும் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், தற்போது அன்னையர் தினம் என்பது ஒரு வியாபார தினம்போல் மாறிவிட்டமை கவலைக் குரியதே. அன்னையர் தினம் வருவதற்கு முன்பு அல்லது அன்னையர்களை கௌரவிக்கவும், மகிழ்விக் கவும் பல நூற்றுக் கணக்கான வியாபாரப் பொருள்கள் சந்தைப்படுத்தப்பட்டு அவற்றை விற்பனை செய்வதிலேயே முழு அளவில் கரிசனை காட்டுவதை அவதானிக்க முடிகின்றது. இந்த விடத்தில் இந்தத்தினத்தை வியாபாரப் பொருளாக ஒரு சம்பவத்தை குறிப்பிட்டே ஆக வேண்டும். எதையும் வியாபாரமாக்கி பணம் பண்ணும் அமைப்பு “அன்னையர் தினம்” அன்று அன்னையின் படம் ஒன்றைப் பொறித்து கொடியொன்றை விற்று பணம் சம்பாதிக்க எத்தனித்தது.

இதனையறிந்த அனா ஜார்விஸ் வெகுண்டெழுந்தார்.1923 ஆம் ஆண்டு இத்தகைய கொடி விற்பனையை எதிர்த்து வழக்குத் தாக்கல் செய்தார். என்னுடைய நோக்கம் அன்னையர் தினம் “சென்ரி மென்ட்” நாளாக இருக்க வேண்டுமேயல்லாமல் பணம் திரட்டும் நாளாக இருக்கக்கூடாது. இத்தகைய வசூலுக்குத் தடைவித்திக்க வேண்டும் என்று வாதிட்டார். ஈற்றில் வெற்றி பெற்றார்.

எனவே, அன்னையர் தினம் என்பதை உள்ளார்த்தமாக உணர்வு பூர்வமாக கடைபிடிக்க வேண்டும் என்பதை அனா ஜார்விஸ் எதிர்பாரத்தாரேயன்றி அது ஆடம்பரமாகவும், பணத்தை மையப்படுத்தியதாகவும் இருக்க வேண்டும் என அவர் எதிர்பார்க்கவில்லை என்பதை இந்த வழக்கு எடுத்துக்காட்டுகின்றது.

எனவே, அன்னையர் தினம் என்பது ஒரு உயரிய தினம். அன்னையரை மகிழ்விக்க எமது சக்திக் கேற்றாற்போல் எதை செய்ய முடியுமோ அதை செய்வோம். ஏனெனில். அன்னையின் பெருமையை நாம் வழங்கும் அன்பினாலன்றி பணத்தால் தீர்மானிக்க முடியாது.



செ.ரியானா




# இந்திய எல்லையில் பதற்றம் அதிகரிப்பு: 32 விமான நிலையங்களில் சேவை நிறுத்தம்

எல்லை தாண்டிய பதற்றங்களை அடுத்து இந்தியாவில் உள்ள 32 விமான நிலையங்களில் உள்நாட்டு விமான சேவைகள் மே 14 வரை நிறுத்திவைக்கப் படுகின்றன என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆதம்பூர், அம்பாலா, அமிர்தசரஸ், அவந்திபூர், பதிண்டா, பூஜ், பிகானேர், சண்டிகர், ஹல்வாரா, ஹிண்டன், ஜெய்சல்மேர், ஜம்மு, ஜாம்நகர், ஜோத்பூர், காண்ட்லா, காங்க்ரா(சுகல்), கேஷோத், கிஷன்கர், குலு மணாலி (பூந்தர்), லெஹ், லூதியானா, லே, லூதியானா, பத்ரா, லூதியானா, போர்பந்தர், ராஜ்கோட் (ஹிராசர்), சர்சாவா, சிம்லா, ஸ்ரீநகர், தோயிஸ் மற்றும் உத்தரலை உள்ளிட்ட விமான நிலையங்களில் உள்நாட்டு விமான சேவைகள் தற்காலிகமாக நிறுத்தப்படுகின்றன என மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

கூடுதலாக, டில்லி மற்றும் மும்பை விமான தகவல் பகுதிகளில் இயங்கும் வழித்தடங்கள் மே 15 அன்று காலை 5:29 மணி வரை மூடப்படுகிறது. இந்தப் பகுதிகளில் எல்லை தாண்டிய பதற்றம் அதிகரித்து வரும் நிலையில், இந்த உத்தரவு வெளியாகியுள்ளது.

பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள பயங்கரவாத முகாம்களை குறிவைத்து இந்தியா அண்மையில் நடத்திய துல்லிய தாக்குதலைத் தொடர்ந்து, ஜம்மு, பஞ்சாப் மற்றும் ராஜஸ்தானில் உள்ள பகுதிகளை குறிவைத்து பாகிஸ்தான் இராணுவம் ட்ரோன் மற்றும் ஏவுகணைத் தாக்குதல்ளை நடத்தி வருகிறது. இந்திய பாதுகாப்பு அமைப்புகள் அவற்றை வெற்றிகரமாக இடைமறித்து வீழ்த்திய போதிலும், தொடர்ந்து எல்லை பகுதிகளில் பதற்றம் நீடித்தவண்ணம் உள்ளது.

முன்னதாக பாதிப்புக்குள்ளான பகுதிகளில் சேவைகள் ரத்து செய்யப்படுகின்றன என ஏர் இந்தியா, இண்டிகோ உள்ளிட்ட நிறுவனங்கள் ஏற்கெனவே அறிவித்திருந்தன.

ஜம்மு காஷ்மீர், பஞ்சாப், ராஜஸ்தான், குஜராத் ஆகிய 4 எல்லை மாநிலங்களில் வியாழக்கிழமை இரவு 36 இடங்களை குறிவைத்து பாகிஸ்தான் ஏவிய 400 இற்கும் மேற்பட்ட துருக்கி தயாரிப்பு ட்ரோன்களை 'சுதர்சன சக்கரம்' (எஸ்–400) உள்ளிட்ட வான் பாதுகாப்பு ஆயுதங்களால் இந்திய இராணுவம் சுட்டு வீழ்த்தியது. அதன் பின்னரும், பாகிஸ்தானின் வான்வழித் தாக்குதல்களும், இந்தியாவின் பதிலடி தாக்குதல்களும் நீடிப்பது கவனிக்கத்தக்கது.

காஷ்மீரின் பாரமுல்லா முதல் குஜராத்தின் பூஜ் வரையிலான 26 இடங்களை பாகிஸ்தான் ட்ரோன்கள் குறிவைத்து கடந்த வெள்ளிக்கிழமை பின்னரவில் தாக்குதல் நடத்தியதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

பாரமுல்லா, ஸ்ரீநகர், அவந்திபோரா, நக்ரோடா, ஜம்மு, ஃபெரோஸ்பூர், பதன்கோட், ஃபாசில்கா, லால்கர் ஜட்டா, ஜெய்சால்மர், பார்மர், புஜ், குவார்பெட் மற்றும் லக்கி நாலா ஆகிய இடங்கள் பாகிஸ்தானின் ஆளில்லா விமானங்களால் குறிவைக்கப்பட்டன. இவற்றை இந்திய இராணுவம் வெற்றிகரமாக முறியடித்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# பாகிஸ்தான் ட்ரோன் தாக்குதல்: பஞ்சாப்பில் 3 பேர் படுகாயம்

பஞ்சாப் மாநிலத்தின் ஃபெரோஸ்பூரில் ஒரு குடியிருப்புப் பகுதியில் ஆயுதமேந்திய ட்ரோன் ஒன்று தாக்கியதில், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேருக்கு படுகாயம் ஏற்பட்டுள்ளது.

முன்னதாக, நேற்று பின்னிரவில் காஷ்மீரின் பாரமுல்லா முதல் குஜராத்தின் பூஜ் வரையிலான 26 இடங்களை பாகிஸ்தான் ட்ரோன்கள் குறிவைத்து தாக்குதல் நடத்தியதாக அதிகாரிகள் தெரிவித்தனர். பாரமுல்லா, ஸ்ரீநகர், அவந்திபோரா, நக்ரோடா, ஜம்மு, ஃபெரோஸ்பூர், பதன்கோட், ஃபாசில்கா, லால்கர் ஜட்டா, ஜெய்சால்மர், பார்மர், புஜ், குவார்பெட் மற்றும் லக்கி நாலா ஆகிய இடங்கள் பாகிஸ்தானின் ஆளில்லா விமானங்களால் குறிவைக்கப்பட்டன.

இதில் பஞ்சாப் மாநிலத்தின் ஃபெரோஸ்பூரில் ஒரு குடியிருப்புப் பகுதியில் ஆயுதமேந்திய ட்ரோன் ஒன்று தாக்கியதில், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேருக்கு பலத்த காயம் ஏற்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். காயமடைந்தவர்களுக்கு மருத்துவ உதவி வழங்கப்பட்டு, அந்தப் பகுதி பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ளது.



இது குறித்து ஃபெரோஸ்பூர் பொலிஸ் அதிகாரி பூபிந்தர் சிங் சித்து செய்தியாளர்களிடம் கூறும்போது,

"ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேர் படுகாயமடைந்ததாக எங்களுக்குத் தகவல் கிடைத்தது. அவர்களுக்கு தீக்காயங்கள் ஏற்பட்டுள்ளன. மருத்துவர்கள் அவர்களுக்கு சிகிச்சை அளித்து வருகின்றனர். பெரும்பாலான ட்ரோன்கள் ராணுவத்தால் செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளன." என்றார்.

காயமடைந்தவர்களுக்கு மருத்துவமனையில் சிகிச்சை அளித்த மருத்துவர், மூன்று குடும்ப உறுப்பினர்களில் இருவருக்கு லேசான தீக்காயங்கள் ஏற்பட்டதாகத் தெரிவித்தார்.

"ஆளில்லா விமான தாக்குதல் காரணமாக, மூன்று பேர் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் ஒரு பெண்ணின் நிலை மோசமாக உள்ளது. அவருக்கு கடுமையான தீக்காயங்கள் ஏற்பட்டுள்ளன. மற்ற இருவருக்கும் குறைவான தீக்காயங்கள் உள்ளன. நாங்கள் உடனடியாக சிகிச்சையைத் தொடங்கியுள்ளோம். அவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்." என்று வைத்தியர் கமல் பாகி தெரிவித்துள்ளார்.



# காஷ்மீர், பஞ்சாப் பகுதிகளில் குண்டு வெடிப்பு சம்பவங்கள்

இந்தியாவின் காஷ்மீர் மற்றும் பஞ்சாப் பிராந்தியத்தில் உள்ள சீக்கியர்களின்புனித நகரமான அமிர்தசர் ஆகிய பகுதிகளில் நேற்றிரவு குண்டு வெடிப்பு சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

சுமார் 3 தசாப்தங்களின் பின்னர் பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான மோதல் தற்போது வலுவடைந்துள்ளது.

இந்நிலையில் பாகிஸ்தான் தரப்பிலிருந்து அனுப்பப்பட்ட பல ஆளில்லா விமானங்களை சுட்டு வீழ்த்தியுள்ளதாக இந்திய இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்தியாவின் மேற்கு மற்றும் வடமேற்கில் 26 இடங்களில் ஆளில்லா விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன என அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இந்தியாவின் காஷ்மீர் – ஸ்ரீநகர் பகுதியில் 10 வெடிப்பு சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

எனினும் இந்த விடயம் தொடர்பில் பாகிஸ்தான் தரப்பிலிருந்து உத்தியோகபூர்வமாக எந்த பதிலும் வழங்கப்படவில்லை.

இந்நிலையில் இரு புறமும் ஏற்பட்ட உயிரிழப்பு மதிப்பீடுகளின் படி 48 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.





## பாகிஸ்தானுக்கு ஐ.எம்.எப். நிதியுதவி:

# பயங்கரவாதத்தை வளர்ப்பதற்கு உதவுமென இந்தியா எச்சரிக்கை

பாகிஸ்தானுக்கு 1 பில்லியன் டொலர் கடன் தொகைக்கு சர்வதேச நாணய நிதியம் அனுமதி அளித்துள்ளது

கடன்வழங்கஇந்தியாஎதிர்ப்புதெரிவித்திருந்த நிலையில் சர்வதேச நிதியத்தின் நிர்வாக குழு கடனுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

இதேவேளை, பாகிஸ்தானுக்கு வழங்கப்படும் தொடர்ச்சியான நிதியுதவி இராணுவ நோக்கங்களுக்காகவோ அல்லது அரசு ஆதரவு பெற்ற பயங்கரவாதத்திற்காகவோ பயன்படுத்தப்படுவதற்கான எல்லா சாத்தியக்கூறுகளும் இருப்பதாக சர்வதேச நாணய நிதியத்தை இந்தியா எச்சரித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் உறுப்பினரான இந்தியா, பாகிஸ்தானுக்கு வழங்கப்படும் நிதி தவறாகப் பயன்படுத்தப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து கடுமையான கவலைகளை வெளிப்படுத்தியதுடன் வாக்கெடுப்பையும் புறக்கணித்துள்ளது.

கடந்த 35 ஆண்டுகளில் 28 ஆண்டுகளாக சர்வதேச நாணய நிதியத்தின் நிதியுதவிகளை பாகிஸ்தான் தொடர்ந்து நம்பியிருப்பதையும், நிலையான பொருளாதார சீர்திருத்தங்களை செயல்படுத்த




அந்நாடு தவறியதையும் காரணம் காட்டி, பாகிஸ்தானில் சர்வதேச நாணய நிதிய திட்டங்களின் செயல்திறனை இந்தியா கேள்வி எழுப்பியுள்ளது.

மேலும் கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும், பாகிஸ்தானுக்கு நான்கு தனித் தனி ஐ.எம்.எப். திட்டங்கள் வகுக்கப்பட்டத்தையும் அவற்றில் உள்ள குறைபாடுகள், மோசமான கண்காணிப்பு அல்லது பாகிஸ்தான் அரசு வேண்டுமென்றே ஒத்துழைக்காதது போன்றவற்றை இந்தியா சுட்டிக்காட்டியது.

பொருளாதார விவகாரங்களில் பாகிஸ்தான் இராணுவத்தின் ஆழமான தலையீடு, கொள்கை சறுக்கல்கள் மற்றும் சீர்திருத்தங்களை தலைகீழாக மாற்றுவதற்கான குறிப்பிடத்தக்க அபாயங்களை ஏற்படுத்துகிறது என்றும் ஒரு சிவில் அரசாங்கம் இப்போது ஆட்சியில் இருந்தாலும் கூட, இராணுவம் உள்நாட்டு அரசியலில் தொடர்ந்து ஒரு பெரிய பங்கை வகிக்கிறது என்றும் இந்தியா கவலை தெரிவித்துள்ளது.

இதுபோன்ற தொடர்ச்சியான நிதியுதவிகள் பாகிஸ்தானை பெரிய கடனாளியாக மாற்றும் அபாயம் இருப்பதாகவும், இது உலகளாவிய விதிமுறைகளை நீர்த்துப்போகச் செய்யும் என்றும் இந்தியா எச்சரித்துள்ளது.

மிக முக்கியமாக, இராணுவ நோக்கங்களுக்காகவோ அல்லது அரசு ஆதரவு பெற்ற பயங்கரவாதத்திற்காகவோ சர்வதேச நாணய நிதி தவறாகப் பயன்படுத்தப்படுவதற்கான எல்லா சாத்தியக்கூறுகளும் இருக்கின்றன என இந்தியா எச்சரித்துள்ளது.

பக்கங்கள் 03

# கனடா முரசு

சனிக்கிழமை 10/05/2025

## புதிய பாப்பாண்டவருக்கு கனடிய பிரதமர் வாழ்த்து



புதிய பாப் பாண்டவராக அமெரிக்க கார்டினல் றொபர்ட் பிரெவோஸ்ட் 02




# கனடாவிலிருந்து பிரியும் யோசனை ஆல்பர்ட்டாவில் கவனம் பெறுகிறது

### அந்த மாகாணப் பிரதமர் டானியல் ஸ்மித் கோடி காட்டுகின்றார்

கனடாவிலிருந்து ஆல்பர்ட்டா பிரிந்து செல்லும் யோசனை அதிக பொதுமக்களின் கவனத்தைப் பெறுவதால், கடந்த பத்தாண்டுகளில் ஆல்பர்ட்டாவிற்கு ஒட்டாவா ஏற்படுத்திய அழிவை சரிசெய்வதில் தான் கவனம் செலுத்துவார் என்று ஆல்பர்ட்டா பிரதமர் டானியல் ஸ்மித் கூறுகிறார்.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கனடாவை அமெரிக்காவின் 51ஆவது மாகாணமாக்க இருப்பதாக மிரட்டிக்கொண்டிருக்கும் நிலையில், கனேடிய மாகாணமொன்றின் மக்கள் அமெரிக்காவுடன் இணைய ஆதரவு தெரிவித்துள்ளமை குறித்த செய்திகள் வெளியாகிவருகின்றன. 03

# ஜி8 அமைப்பிலிருந்து ரஷ்யா வெளியேறியமைக்கு ஜஸ்டின் ட்ரூடோ மீது குற்றம் சுமத்துகின்றார் ட்ரம்ப்!

### ஆனால் அப்போது பதவியிலிருந்த கனடாப் பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பர்







ஜி8 அமைப்பிலிருந்து ரஷ்யா வெளியேற முக்கிய காரணம் கனடாவின் முன்னாள் பிரதமரான ஜஸ்டின் ட்ரூடோதான் என்று கூறியுள்ளார் அமெரிக்க ஜனாதிபதியான ட்ரம்ப்.

ரஷ்யாவை ஜி8 அமைப்பிலிருந்து வெளியேற்ற எடுக்கப்பட்ட முயற்சிக்கு தலைமை தாங்கியது ஜஸ்டின் ட்ரூடோதான் என்று 02




# அமெரிக்காவில் இருந்து துப்பாக்கிகளை கடத்தினார் என கனடிய இளைஞர் கைது

அமெரிக்காவிலிருந்து கனடாவிற்குள் துப்பாக்கிகள் மற்றும் தடைசெய்யப்பட்ட சாதனங்களை கடத்தினார் எனக் குற்றம் சாட்டப்பட்ட 24 வயதுடைய ஹாமில்டன் நகரைச் சேர்ந்த டேனியல் மெனசஸ் என்பவருக்கு எதிராக மொத்தம் 19 குற்றச்சாட்டுகள் பதியப்பட்டுள்ளன.

இந்த வழக்கு தொடர்பான விசாரணை மார்ச் மாதம் தொடங்கப்பட்டது. இது ஒன்றாரியோ மாகாண பொலிஸார் மற்றும் அமெரிக்க உள்துறை பாதுகாப்பு அமைச்சகம் உள்ளிட்ட அமைப்புகளைக் கொண்ட எல்லை அமலாக்கப்பாதுகாப்புப்பணிக்குழுவால் இந்த விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

ஏப்ரல் 16ம் திகதி பேர்லிங்டன் நகரில் மெனசஸ் கைது செய்யப்பட்டார்.

இந்த நபர் எத்தனை துப்பாக்கிகளைக் கடத்த முயற்சித்தார் என்பது பற்றி பொலிஸாரால் தகவல் தெரிவிக்கப்படவில்லை.

அனுமதியின்றி துப்பாக்கி இறக்குமதி செய்தல், தடைசெய்யப்பட்ட சாதனங்களை அனுமதியின்றி வைத்திருத்தல், துப்பாக்கி அனுமதியின்றி வைத்திருப்பது அறிந்திருந்தும் வைத்திருத்தல் உட்பட மொத்தமாக 19 குற்றச்சாட்டுகள் இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது

## ஜி8 அமைப்பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூறியுள்ளார் அமெரிக்க ஜனாதிபதியான ட்ரம்ப்.

விடயம் என்னவென்றால், ட்ரூடோ கனடாவின் பிரதமராவதற்கு ஓராண்டிற்கு முன்பே ரஷ்யாவை வெளியேற்றும் முடிவு எடுக்கப்பட்டுவிட்டது!

ஜி8 அமைப்பிலிருந்து ரஷ்யா வெளியேற்றப்பட்டது ஒரு மோசமான முடிவு என்று தான் கருதுகின்றார் எனத் தெரிவித்த ட்ரம்ப், ட்ரூடோவும், அமெரிக்க முன்னாள் ஜனாதிபதியான ஒபாமாவும்தான் அதற்குக் காரணம் என்றும் குறிப்பிட்டார்.

ரஷ்யா மட்டும் இப்போதும் ஜி8 அமைப்பில் இருந்திருக்குமானால், அந்த அமைப்பிலுள்ள மற்ற தலைவர்கள் புடினுடன் விவாதித்து, உக்ரைன் போர் வேண்டாம் என்று கூறியிருக்கமுடியும்.

ரஷ்யா மட்டும் ஜி8 அமைப்பில் இருந்திருக்குமானால், இன்று பலரது உயிரிழப்புகளுக்குக் காரணமான இப்படிப்பட்ட ஒரு போர் நடந்துகொண்டிருக்காது என்றும் கூறியுள்ளார் ட்ரம்ப்.

அதாவது, ஜி8 என்னும் ஒரு அமைப்பு முன்பு இருந்தது. அதில் ரஷ்யா மற்றும் இன்று ஜி7 அமைப்பிலிருக்கும் நாடுகளான கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான், பிரித்தானியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் இணைந்திருந்தன.

2014ஆம் ஆண்டு, புடின் கிரீமியாவை ரஷ்யாவுடன் இணைத்தற்கு அப்போதைய கனேடிய பிரதமரான ஸ்டீபன் ஹார்ப்பர் கடும் கண்டனம் தெரிவித்திருந்தார்.

அதைத் தொடர்ந்து, ரஷ்யாவில் நடைபெற இருந்த ஜி7 உச்சி மாநாட்டை அந்த அமைப்பிலிருந்த மற்றத் தலைவர்கள் புறக்கணித்தனர்.

அதற்கு பதிலாக, ரஷ்யா இல்லாமல், தாங்களாகவே பிரஸ்ஸல்ஸில் ஒரு உச்சி மாநாட்டை அவர்கள் நடத்த, ஜி8 அமைப்பு மறைந்து ஜி7 அமைப்பு உருவானது.

ஸ்டீபன் ஹார்ப்பர் மீது குற்றம் கூறுவதற்குப் பதிலாகத்தான், தவறுதலாக ட்ரூடோ மீது குற்றம் சாட்டியுள்ளார் ட்ரம்ப்!

## புதிய பாப்பாண்டவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேர்வானமையைத் தொடர்ந்து, கனடியப் பிரதமர் மார்க் கார்னி அரசியல் மற்றும் மத ஒற்றுமையை வலியுறுத்தும் வகையில் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

“சிஸ்டீன் தேவாலயத்தில் மேல் எழுந்த வெள்ளை புகை, புதிய பாப்பாண்டவரின் தொடக்கத்தைக் குறிக்கிறது. இது உலகமெங்கும் உள்ள நூறு கோடிக்கும் மேற்பட்ட விசுவாசிகளுக்கு நம்பிக்கையும், புத்துயிர்ப்பும் ஊக்கமுயம் அளிக்கும் தருணம்,” என பிரதமர் மார்க் கார்னி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்

“பாப்பாண்டவர் பதினான்காவது லியோவின் பாப்பரசரத்தை கனடா மக்கள் மனமார வாழ்த்துகின்றனர்.

இந்த உலகம் எதிர்நோக்கும் தீவிரமான சவால்களுக்கிடையில், அவரின் பதவிக் காலம் ஞானத்தால், விவேகத்தால், பொது நலத்துக்கான அர்ப்பணிப்பால், மனிதக்கொள்கைகளை மதிப்பதால் நிரம்பியவையாக இருக்கட்டும்” எனக் குறிப்பிட்டார்.

“ஒற்றுமை, நியாயம் மற்றும் நிலைத்தத் தன்மையால் வழிநடத்தப்படும் உலகத்தை கட்டியெழுப்பும் பணியில் கனடா, புனிதர் பாப்பாண்டவருடன் இணைந்து பணியாற்ற ஆவலுடன் எதிர்நோக்குகிறது,” எனக் கனடியப் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார்.

2021 ஆம் ஆண்டில் கனடாவின் மத்திய அரசு நடத்திய மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி, 10.8 மில்லியன் கனடியர்கள் தங்களை கத்தோலிக்கர்கள் என அடையாளப்படுத்தியுள்ளனர்.



# இந்தியா – பாகிஸ்தான் மோதலால் கனடா தம்பதியர் வாழ்வில் தாக்கம்!

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான மோதல், கனேடிய குடும்பம் ஒன்றிற்கு கவலையை உருவாக்கியுள்ளது.

கனடாவின் பிராம்டனில் தங்கள் மூன்று பிள்ளைகளுடன் வாழ்ந்துவருகிறார்கள், சதாஃப் இக்பால், ஹர்மான் சிங் தம்பதியர். சதாஃப் பாகிஸ்தான் நாட்டவர், ஹர்மான் இந்தியாவைச் சேர்ந்தவர்.

தீவிரவாதிகள் காஷ்மீரிலுள்ள பஹல்காம் என்னுமிடத்தில் சுற்றுலாப் பயணிகள் மீது நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து, இந்தியா பாகிஸ்தானியர்களுக்கு வழங்கிய விசாக்களை ரத்து செய்துவிட்டது.

சதாஃபும் ஹர்மானும் தங்கள் உறவினர்களை சந்திக்க இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் செல்வதுண்டு.

அடுத்த ஆண்டு வாக்கில் இருவரும் குடும்பத்துடன் பாகிஸ்தான் செல்ல திட்டமிட்டிருந்த நிலையில், தற்போது இரு நாடுகளுக்குமிடையிலான மோதல் காரணமாக தங்கள் பயணத் திட்டத்தை ரத்து செய்துவிட்டார்கள் தம்பதியர்.

தம்பதியர் இருவருக்கும் இரு நாடுகளைச் சேர்ந்த நண்பர்களும் உண்டு. இரு நாட்டவர்களின் பண்டிகைகளின் போதும் அனைவரும் கூடி பண்டிகை கொண்டாடி மகிழ்வதுண்டு.

“நான் அவரைத் திருமணம் செய்த போது, அவர் சீக்கியர் என்றோ, இந்தியர் என்றோ நான் பார்க்கவில்லை, நாங்கள் இருவரும் ஒருவரையொருவர் நேசிக்கிறோம் அவ்வளவுதான்!” – என்கிறார் சதாஃப்.

எங்கள் பிள்ளைகளுக்கும் மத வித்தியாசங்கள் எல்லாம் தெரியாது, அன்பு மட்டுமே தெரியும் என்கிறார் அவர்.

இந்த தம்பதியர் மட்டுமல்ல, ப்ராம்டனில் வாழும் பலரும், இரு நாடுகளுக்கமிடையில் விரைவில் அமைதி ஏற்பட வேண்டும் என விருப்பம் தெரிவித்துள்ளார்கள்.

## கனடாவிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கனேடிய மாகாணமான ஆல்பர்ட்டாவில், சுமார் 30 முதல் 40 சதவிகித மக்கள் கனடா அரசு மீது அதிருப்தி கொண்டுள்ளனர் என ஆல்பர்ட்டா மாகாண பிரதமர் டானியல் ஸ்மித் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், பிரிவினைக்கு ஆதரவான அமைப்பு ஒன்று, கனடாவிலிருந்து பிரிவது தொடர்பில் பிரேரணை ஒன்றை முன்வைத்துள்ளது.

மக்கள் அந்த பிரேரணையில் கையெழுத்திட்டுவரும் நிலையில், ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மக்கள் கையெழுத்திட்டால், அந்த பிரேரணை வாக்கெடுப்புக்கு வரும்.

அந்தப் பிரேரணை போதுமான கையெழுத்துக்களைப் பெறும் நிலையில், அதை அனுமதிப்பது என முடிவு செய்துள்ளார் ஆல்பர்ட்டா மாகாண பிரீமியரான டேனியல் ஸ்மித்.

காரணம், தான் அதை அனுமதிக்காவிட்டால், எதிர்க்கட்சியினர் அதை வைத்து அரசியல் செய்வார்கள் என்கிறார் அவர்.

இவ்வாரம் ஒரு செய்தியாளர் சந்திப்பின் போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

குடிமக்கள் ஒரு மனுவில் தேவையான கையொப்பங்களைச் சேகரித்தால், 2026 ஆம் ஆண்டில் மாகாணப் பிரிவினை குறித்து வாக்கெடுப்பு நடத்துவேன் என்று ஸ்மித் மீண்டும் வலியுறுத்தினார்.

பொதுவாக்கெடுப்பு நடக்கும் என்று கருத விரும்பவில்லை என்றும், ஆனால் வாக்களிக்கும் செயல்முறையை மதிக்கப் போகிறார் எனவும் ஸ்மித் கூறினார்.

கனடாவிலிருந்து ஆல்பர்ட்டா பிரியும் கேள்வியை ஆல்பர்ட்டா மக்களிடம் வைக்கத் தனது அரசாங்கத்திடம் எந்தத் திட்டமும் இல்லை என்றும், ஆனால் ஒட்டாவாவிடமிருந்து மாகாணத்துக்கு உரிய மரியாதைக் கோர தனது அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் ஸ்மித் கூறினார்.

“கனடாவிலிருந்து ஆல்பர்ட்டா பிரிவதை நான் ஆதரிக்கவில்லை” என்று ஸ்மித் கூறினார்.

“ஐக்கிய கனடாவிற்குள் வலுவான மற்றும் இறையாண்மை கொண்ட ஆல்பர்ட்டாவிற்கு முன்னோக்கி ஒரு பாதை இருக்கும் என்று எனக்கு இன்னும் தனிப்பட்ட முறையில் நம்பிக்கை உள்ளது. எனவே புதிய பிரதமர் மார்க் கார்னியுடன் ஆல்பர்ட்டாவிற்கு நியாயமான ஒப்பந்தம் குறித்து பேச்சுவார்த்தை நடத்த எனது சக்திக்குட்பட்ட அனைத்தையும் செய்வேன்.” – என்றார் அவர்.

இருப்பினும், ஆல்பர்ட்டா மக்களின் விருப்பங்களை மதிக்கின்றார் எனவும், வாக்கெடுப்பு செயல்முறையை மதிப்பார் எனவும் அவர் கூறினார். ஆல்பர்ட்டாவின் எதிர்காலம் குறித்து ஆல்பர்ட்டா மக்கள் திறந்த, வெளிப்படையான விவாதங்களை நடத்துவது முக்கியம் என்றும் ஸ்மித் கூறினார்.

பிரிவினை பொது வாக்கெடுப்புக்கு தேவையா என்பதை ஆல்பர்ட்டா மக்கள் தான் முடிவு செய்ய வேண்டும் என்று அவர் கூறினார்.

கடந்த வாரம், கார்னி கூட்டாட்சித் தேர்தலில் லிபரல்களை வெற்றிக்கு அழைத்துச் சென்ற ஒரு நாளுக்குப் பிறகு, ஆல்பர்ட்டா ஒரு சட்டத்தை அறிமுகப்படுத்தியது. அது நிறைவேற்றப்பட்டால், மாகாண வாக்கெடுப்பைத் தூண்டுவதற்குத் தேவையான வரம்பை அது குறைக்கும் எனக் கூறப்பட்டது.

இதற்கிடையில், ஒன்ராறியோ பிரீமியரான ஃபோர்ட், இது நாடு ஒன்றிணைவதற்கான நேரம், மக்கள், நாங்கள் நாட்டை விட்டு செல்கிறோம் என்று கூறுவதற்கான நேரம் அல்ல என்று கூறியுள்ளார்.

ஃபோர்டின் கருத்துக்கு பதிலளித்துள்ள ஸ்மித், நான் ஃபோர்டிடம் அவர் எப்படி அவரது மாகாணத்தை நடத்தவேண்டும் என்று கூறுவதில்லை, அவரும் நான் எப்படி எனது மாகாணத்தை நடத்தவேண்டும் என எனக்கு சொல்லமாட்டார் என்று நம்புகிறேன் என்று கூறியுள்ளார்.

நடப்பதையெல்லாம் பார்த்தால்,